DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.178/2021**

Prosecution **PW. 4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.ராஜசேகர் | கிராமம் : | |
| கணவர் பெயர் : | அன்னாவி | வட்டம் : | |
| மதம் : | | தொழில்/ பணி : | |
| ஜாதி : | | வயது : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2025

1, 2 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் திருச்சி சரக Q பிரிவு காவல் சரக காவல் துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.10.2017 ம் தேதி மாயனூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது உதவி ஆய்வாளர் ஜாபர், சிறப்பு உதவி ஆய்வாளர் கதிரேசன், த.கா. 1086 ஆறுமுகம் மு.நி.கா. 1417 என்ற சதிஷ்குமார் ஆகியோருடன் மணல் திருட்டு தடுப்பு ரோந்து அலுவலக கோவக்குளம், பிச்சம்பட்டி, கிருஷ்ணராயபுரம், திருக்காம்புலயூர், ஆகிய இடங்களில் ரோந்து செய்து பின்னர் மாயனூர் கதவணை பாலம் வழியாக மணலை திருடி விற்பனைக்காக லாரியில் கொண்டுசெல்வதாக கிடைத்த தகவலின் படி சுமார் 02.00 மணியளவில் மாயனூர் ரயில்வே கேட் அருகே சென்று பார்த்தபோது TN 28 AB 5605 என்ற லாரி, TN 29 AM 4708 என்ற எண்ணுள்ள லாரிகளில் மணலை ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்தவர்களை போலிஸ் பார்ட்டி சகிதம் சுற்றிவளைத்து பிடிக்க TN 29 AM 4708 என்ற லாரியின் டிரைவர் தப்பி ஓடிவிட்டார்.

2. வண்டியில் உட்கார்ந்து இருந்த தர்மராஜ் என்பவரை பிடித்து விசாரித்த போது தப்பி ஓடிய டிரைவர் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாரைச்சேர்ந்த உத்தரபதி மகன் சுரேந்தரன் என தெரியவந்தது. பின்னர் TN 28 AB 5605 என்ற லாரியின் டிரைவர் வையாபுரி, தர்மராஜை கைதுக்காக காரணம் கூறி 03.30

மணியளவில் கைது செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் போலிஸ் சாட்சிகள் உதவி ஆய்வாளர் ஜாபர், சிறப்பு ஆய்வாளர் கதிரேசன் முன்னிலையில் எதிரி வையாபுரியை விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை மடிக்கணிணியில் பதிவு செய்தேன். பின்பு வையாபுரி ஆஜர் செய்த 2 1/2 யூனிட் மணலுடன் கூடிய TN 28 AB 5605 டாரஸ் லாரியை காலை 05.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். 2 1/2 யூனிட் மணலுடன் கூடிய TN 29 AM 4708 டாரஸ் லாரியை காலை 05.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன்.

3. பின்னர் எதிரி வழக்குச்சொத்துடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 347/2017 சட்டப்பிரிவு 379 r/w 21(1) MMDR ன்படி பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அன்றைய தினமே காலை 08.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டியன், சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வைமகசர், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் உதவி ஆய்வாளர் ஜாபர்,. சிறப்பு உதவி ஆய்வாளர் கதிரேசன், த.கா. 1086 ஆறுமுகம் மு.நி.கா. 1417 சதிஷ்குமார், பாண்டியன், சுப்ரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. எதிரிகளை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். படிவங்கள் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**படிவங்கள் –91 அ.சா.ஆ.8, 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கில் கைப்பற்றப்பட்ட மணலை ஆய்வு செய்து மதிப்பீடு செய்ய வேண்டுகோள் கடிதம் இளநிலை பொறியாளர் பொதுப்பணித்துறை நீர் ஆதாரம் துறை கனிமம் மற்றும் கண்காணிப்பு பிரிவுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவர் ஆய்வு செய்து மதிப்பீட்டு சான்றிதழ் பெற்றேன். (**மதிப்பீட்டு சான்றிதழ் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் இளநிலை பொறியாளர் குணசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 3ம் எதிரி சுரேந்தரன் நீதிமன்றம் மூலம் முன்பிணை பெற்றுள்ளதால் கைது செய்யவில்லை. சட்டப்பிரிவு 379 r/w 21(1) MMDR லிருந்து சட்டப்பிரிவு 379 இதச வாக பிரிவு மாற்றம் செய்தேன். (**பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 12.01.2018ம் தேதி எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/—ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.